


**15. 10. 2025**

**தலைப்பு செய்திகள்**

- **மதிப்பு** கூட்டப்படும் **வேளாண் உற்பத்தி பொருட்களால்** விவசாயிகளின் வருவாய் உயரும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- **ரயில்வே துறை மிகப்பெரிய ஏற்றுமதி மையமாக** உருவெடுத்து வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- **கரூர் துயரம் போன்ற சம்பவம் எதிர்காலத்தில்** நிகழாமல் தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

- **கள்ளக்குறிச்சி** மாவட்டம் முசுகுந்தா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஆய்வுசெய்து வருவதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் கூறினார்.

- 5.திருவள்ளூர் மாவட்டம் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் வெளியேற்றப்பட இருப்பதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

**வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு மதிப்பு** கூட்டுவதால் விவசாயிகளின் வருவாய் உயரும் என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கர்நாடகா மாநிலம் கோப்பால் மேதகல் கிராமத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் பொதுநல மையத்தை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், விவசாயிகளின் நலமே, மத்திய அரசின் உயர்முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

அண்மை சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்களால் டிராக்டர் உள்ளிட்ட பல்வேறு வேளாண் உபகரணங்களின் வரி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டதுடன் சிலவற்றின் வரி முழுமையாக ரத்து செய்யப்பட்டதாக எடுத்துரைத்தார்

பிரதமரின் தன்தானிய வேளாண் பெருக்கத்திட்டம் விவசாயிகள் தரமான விதைகளை கொள்முதல் செய்ய வழிகோலுவதோடு, அதிநவீன வேளாண் தொழில்நுட்பங்கள், நீர்பாதுகாப்பு, சொட்டுநீர் பாசனம், மேம்பட்ட பாசனத்திட்டங்கள் போன்றவற்றிற்கு வகை செய்வதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

**அஷ்வினி வைஷ்ணவ்**

**நம் நாட்டின் ரயில்வே துறை மிகப்பெரிய** ஏற்றுமதி மையமாக உருவெடுத்து வருகிறது என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 16-வது சர்வதேச ரயில்வே கண்காட்சியை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், கடந்த 11 ஆண்டுகளில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியின் கீழ், ரயில்வே துறையை நவீனமயமாக்க உயர்முன்னுரிமை வழங்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

ரயில்வே துறையை நவீனமயமாக்க 2 லட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் முதலீடு செய்யப்படுவதாகவும் கூறினார்.

நம் நாட்டில் அண்மையில் தயாரிக்கப்பட்ட ரயில்பெட்டிகள் ஆப்பிரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

நாட்டில் 35 ஆயிரம் கிலோமீட்டர் நீளத்திற்கு ரயில் பாதைகள் அமைக்கப்பட்டதாகவும், 46 ஆயிரம் கிலோமீட்டர் நீள ரயில் பாதைகள் மின்மயமாக்கப் பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த 3 நாள் கண்காட்சியில் ரயில்வேயின் அம்ரித்பாரத், தேஜஸ், வந்தேபாரத், நமோ பாரத், மெட்ரோ ரயில்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில்,

நம்நாட்டின் உற்பத்தி திறனை உலகத்திற்கு பறைசாற்றும தளமாக இது திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

பிரதமர்

**பிரதமர் திரு.நரேந்திரமோடி பீஹாரில் பி.ஜே.பி.** கட்சியின் வாக்குச்சாவடி முகவர்களுடன் இன்று கலந்துரையாடுகிறார்.

பீஹாரில் 243 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்தமாதம் 6, 11 தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் நிலையில் இந்த கலந்துரையாடல் முக்கியத்துவம் பெறுகிறது.

❖❖❖❖❖❖

அப்துல் கலாம்

**முன்னாள் குடியரசு தலைவர்** டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் 94 பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் விடுத்துள்ள செய்தியில் இளையோர் மனங்களில் பெரிய கனவிற்கான உத்வேகத்தை ஊட்டிய தொலைநோக்கு பார்வையாளரை நினைவு கூறுவோம் என கூறியுள்ளார்

அப்துல் கலாமின் கனவான வலிமையான வல்லரசு இந்தியாவை உருவாக்க உறுதி ஏற்போம் என்றும் பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

**கரூர் துயரம் போன்ற சம்பவம் எதிர்காலத்தில்** நிகழாமல் தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விளக்கம் அளித்த முதலமைச்சர், இதுபோன்ற துயரசம்பவம் இனி நடைபெறா வண்ணம் அனைத்து அரசியல் இயக்கங்களும், பொது அமைப்புகளும் உறுதியேற்க வேண்டும் என்றார்.

உச்சநீதிமன்றம் நியமித்துள்ள விசாரணை குழுவில் தமிழகத்தை சேர்ந்த ஐ.பி.எஸ். அதிகாரிகள் இடம்பெறாதது குறித்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு முறையிடும் என முதலமைச்சர் கூறினார்.

கரூர் சம்பவத்தில் த.வெ.க.தலைவர் குறிப்பிட்ட நேரத்திற்கு நிகழ்ச்சிக்கு வராமல் 7 மணிநேரம் தாமதமாக வந்ததாகவும், கூட்டத்தினருக்கு குடிநீர், உணவு உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதிகளையும் செய்யவில்லை என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு 10 ஆயிரம் பேர் வருவார்கள் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கூறியபோதும், அதற்கும் மேலானவர்கள் வரக்கூடும் என்று அரசு எதிர்பார்த்து மாவட்ட கண்காணிப்பாளர் தலைமையில் 600-க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டதாகவும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

கரூர் சம்பவத்தை தமிழ்நாடு சட்டப்படி விரைந்து கையாண்டதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**எடப்பாடி கே. பழனிச்சாமி வெளிநடப்பு**

அப்போது குறுக்கிட்ட பேசிய எதிர்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி, கரூரில் அரசு தரப்பில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை எனவும், சம்பவம் நடந்த இடத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் திரு.எ.வ. வேலு, இதே இடத்தில் அஇஅதிமுக. பிரச்சார கூட்டம் நடைபெற்றதை சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து கரூர் பிரச்சனை குறித்து திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி பேச முற்பட்டபோது, அவைத் தலைவர் அனுமதி மறுக்கவே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையில் அஇஅதிமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.

❖❖❖❖❖❖

**ச.பே. - சுப்பிரமணியன்**

**கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் ஏனைய** மாவட்டங்களிலிருந்து கூடுதல் மருத்துவர்கள் கரூருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, 39 உடல்களுக்கு 25 மருத்துவர்களை கொண்டு, 14 மணி நேரம் உடற்கூராய்வு நடத்தப்பட்டதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

ச.பே.

**கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஒன்றியம்,** முசுகுந்தா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஆய்வுசெய்து வருவதாகவும், நிதி நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அளித்து நிறைவேற்றப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் சட்டப்பேரவையில் கேள்விநேரத்தின் போது இன்று பதிலளித்தார்.

**கோபிசெட்டிபாளையத்தில் புறவழிச்சாலை** அமைக்க சாத்தியக்கூறுகள் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மதுரையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு வருவதாகவும் கூறினார்.

**சிறைச்சாலைகளில் சீர்த்திருத்தம்** செய்வதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது என்று அமைச்சர் **திரு. ரகுபதி** கூறியுள்ளார்.

மேலும் சேலம் மத்திய சிறைச்சாலையில் கழிவுநீர் கால்வாய் 49 ஆயிரம் ரூபாய் செலவில் பழுதுபார்க்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**ச.பே. சட்ட முன்வடிவு தாக்கல்**

**தமிழக சட்டப்பேரவையில் சம்பளங்கள் வழங்கல்** திருத்த முன்வடிவு,

தனியார் பல்கலைகழகங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான திருத்த மசோதா,

2025-26 ஆம் நிதியாண்டிற்கான கூடுதல் செலவீனங்கள் திருத்த மசோதா ஆகியவை இன்று தாக்கல் செய்யப்பட்டன.

**நாமக்கல்லில் சித்த மருத்துவ கல்லூரி விரைவில்** திறக்கப்படும் என மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

உதயநிதி

**வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை** நடவடிக்கையாக சென்னை கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று நேரில் ஆய்வுமேற்கொண்டார்.

கட்டுப்பாட்டு மையத்தில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்கள் மற்றும் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖

**நீர்த்தேக்கம்**

**சென்னையில் தொடர்மழை பெய்துவருவதால்** பாதுகாப்பு காரணமாக புழல் ஏரியிலிருந்து இன்று பிற்பகல் 2 மணிக்கு 200 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படவுள்ளது.

**திருவள்ளூர் மாவட்டம் பூண்டி** நீர்த்தேக்கத்திலிருந்து இன்று பிற்பகல் 700 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட இருப்பதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி வாய்ஸ்**

**கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில்** கனமழை பெய்துவருவதால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**காஞ்சிபுரம் வாய்ஸ்**

**காஞ்சிபுரம் மாவட்டம் ராணிப்பேட்டை** அணைக்கட்டிலிருந்து பாலாற்றில் 8 ஆயிரம் கனஅடிநீர் திறக்கப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**வானிலை**

**தென்மேற்கு பருவமழை அடுத்த 24 மணி நேரத்தில் இந்திய** பகுதியிலிருந்து விலகக்கூடும் என்றும்,

வடகிழக்கு பருவமழை தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திர பிரதேச பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் தொடங்கக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழையும்,

கடலூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை சிவகங்கை மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாகா இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர்** இரண்டாவது சுற்றுக்கு இந்தியாவின் சோனா கில்பன் முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்றில் கில்பன் 21-10, 21-16 என்ற நேர் செட்களில் சக வீரர் பாலியனை வென்றார்.

❖❖❖❖❖❖❖

**டென்மார்க் ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின்** ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் லக்ஷயா சென் - அயர்லாந்தின் **Nhat Nguyen** -ஐ இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

❖❖❖❖❖❖❖